## மீனவர்களுக்கு நிவாரணம்...



சென்னை ராயபுரம் அறிவகம் மண்டபத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்டஸ் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.4.67 கோடி மதிப்பிலான நிவாரணங்களை வழங்கிய மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன். உடன் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கால்நடை பராமரிப்பு பால் வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலர் ஏ.கார்த்திக், ஆணையர் கே.எஸ்.பழனிசாமி, சென்னை வடக்கு மாவட்ட திமுக செயலர் தா.இளைய அருணா, சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, கே.பி.சங்கர் உள்ளிட்டோர்.

# ரூ.1.12 கோடியில் திட்டப் பணிகள்

## அடிக்கல் நாட்டினார் அமைச்சர்

**சென்னை, ஏப்.24:** சென்னை ராயபுரம் மண்டலத்துக்கு உள்பட்ட பகுதியில் ரூ.1.12 கோடி மதிப்பிலான நலத் திட்ட பணிகளுக்கு அமைச்சர் பி.கே சேகர் பாபு அடிக்கல் நாட்டினார்.

ராயபுரம் மண்டலத்தில் துறைமுகம் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, 57-ஆவது வார்டு ஜட்காபுரம் பகுதியில் ரூ.59 லட்சம் மதிப்பில் பல்நோக்கு மையக் கட்டடம், யானைக்கவுனி மேம்பால சாலை கல்யாணபுரம் குடியிருப்பு பகுதியில் ரூ.35 லட்சம் மதிப்பில் புதிதாக அங்கன்வாடி மையம், ரூ.17.98 லட்சம் மதிப்பில் விளையாட்டுத் திடல் என மொத்தம் ரூ.1.12 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் சேகர் பாபு, மத்திய சென்னை மக்களவை உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை மேயர் ஆர்.பிரியா, ராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, வடக்கு வட்டார துணை ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழுக்கு தொண்டு செய்தவர்களுக்கு மரணம் இல்லை

## முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன்

**சென்னை, ஏப்.24:** தமிழுக்கு தொண்டு செய்தவர்களுக்கு மரணம் இல்லை என்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தெரிவித்தார்.

இந்திய-ரஷிய கலாசார மற்றும் நட்புறவுக் கழகம் சார்பில் ரஷிய கலாசார மையத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் 90-ஆவது பிறந்தநாள் விழாவில் அவர் பேசியதாவது: ஜெயகாந்தன் போன்ற சாதனையாளர்களுக்கு மறைந்த பிறகும் வயது அதிகரித்துக் கொண்டே போகும். அவர் வாழ்ந்த காலத்தை நவீன இலக்கிய காலம் என கூறலாம்.

அவருடைய கதைகளில் இன்னும் அவர் உயிருடன் வாழ்ந்து வருகிறார். தமிழுக்கு தொண்டு செய்பவர்களுக்கு மரணம் இல்லாதது போல் இவருக்கும் மரணம் இல்லை.

தமிழுக்கு விமோசனம் கொடுத்த அவர் அந்த கால இலக்கிய தமிழை நவீனப்படுத்தினார். வாழும் தலைமுறைக்கும், வருங்கால தலைமுறைக்கும் வாழ்க்கையை வழிகாட்டுவதற்காக தனது படைப்புகளைப் சமர்ப்பித்துள்ளார் என்றார் அவர்.

இந்த விழாவில் ரஷிய கலாசார மையத்தின் இயக்குநர் ஜெனடி ரோகலேவ், இந்தோ ரஷிய கலாசார மற்றும் நட்புறவு சங்கத்தின் பொதுச் செயலர் தங்கப்பன், திரைப்பட தொகுப்பாளர் பி.லெனின் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஒருங்கிணைந்த பட்டதாரி நிலை தேர்வு: பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பிக்கலாம்

**சென்னை, ஏப்.24:** மத்திய பணியாளர்கள் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பட்டதாரி நிலையிலானத் தேர்வுக்கான, கட்டணமில்லா பயிற்சி வகுப்பில் சேர தகுதியுடைவர்கள் விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் சு.அமிர்தஜோதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய பணியாளர்கள் தேர்வாணையம் ஒருங்கிணைந்த பட்டதாரி நிலையிலானத் தேர்வுக்கான அறிவிப்பை ஏப்.3-ஆம் தேதி வெளியிட்டது.

இதில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், நிறுவனங்கள், அரசியலமைப்பு சார்ந்த அமைப்புகள், சட்டபூர்வ அமைப்புகள், தீர்ப்பாயங்கள் போன்றவற்றில் உள்ள குரூப் 'பி' மற்றும் குரூப் 'சி' நிலையில், 7,500-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ளன.

இத்தேர்வுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் www ssc.nic.in எனும்பணியாளர்தேர்வாணையத்தின் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை மே 3-ஆம் தேதிக்குள்ளும், தேர்வுக் கட்டணத்தை மே 4-ஆம் தேதிக்குள்ளும் செலுத்தலாம்.

இது குறித்து கூடுதல் விவரங்களை https://ssc.nic.in/SSCFileServer/PortalManagement/UploadedFiles/noticeCGL எனும் இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

இந்த தேர்வுகளுக்கான கட்டணமில்லாத பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் அனைத்து தன்னார்வப் பயிலும் வட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

இந்த தேர்வுக்கான பாடத் திட்டங்கள் மற்றும் பாடக்குறிப்புகள் தமிழ்நாடு அரசின் https://tamilnaducareerservices.tn.gov.in எனும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ' டி.என்.கேரியர் சர்வீஸ் எம்ப்ளாய்மென்ட் மற்றும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் 'எய்ம் டிஎன்' என்ற 'யூடியூப்' வலைதளத்திலும் பாடத்திட்டங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்கு விண்ணப்பித்த மற்றும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை தொடர்பு கொண்டு இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# ஒரே மாதத்தில் 113 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு

**சென்னை, ஏப்.24:** சென்னை மாவட்டத்துக்குள்பட்ட பகுதியில் ஒரே மாதத்தில் 113 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

சென்னைமாவட்டத்தில்குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பிகார் அசோசியேஷன் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற பை தைக்கும் வியாபாரிகள் மற்றும் சிறு வியாபாரிகளுக்கான கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை முதல் வட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அ.ஜெயலட்சுமி பேசும்போது, குழந்தை தொழிலாளர் தடுப்புப்படை உறுப்பினர்கள் ஏப்ரல் மாதத்தில் நடத்திய சோதனையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து 113 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளை பணியமர்த்தும் நிறுவனங்களுக்கு தொழிலாளர் மற்றும் முறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ரூ.20,000 முதல் ரூ.50,000 வரை அபராதமும், 6 முதல் 2 வருடம் வரை சிறை தண்டனையும் விதிக்கப்படும்.

கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழித்தல் சட்டத்தின் கீழ் ரூ.2000 அபராதமும், 2 ஆண்டுகள் சிறையும், இந்திய தண்டனைச்சட்டத்தின் கீழ் ஓராண்டு சிறை அல்லது14 ஆண்டுகள் சிறை அல்லது ஆயுள்சிறை விதிக்கப்படும்.

மேலும், சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்ட விதி 75-இன் கீழ் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ரூ.1லட்சம் அபராதமும், விதி 79-இன் கீழ் 5 ஆண்டுகள் சிறையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதிக்கப்படும்.

18 வயதுக்கு குறைவான இளஞ் சிறார்களை கட்டாயமாக பணியில் அமர்த்துவது, 6 மணி நேரத்துக்கு மேலாகவும், இரவு நேரங்களிலும் வேலை வாங்குவது, அவர்களுக்கு குறைந்த பட்ச கூலி வழங்காமல் இருப்பது போன்ற குற்றங்கள் குறித்து ஈடுபடும் நிறுவனங்கள் குறித்து தகவல்களை 155214 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என்றார் அவர்.

# 'ஸ்பார்ஷ்' திட்டம்: முப்படை ஓய்வூதியதாரர்களுக்கு விழிப்புணர்வு

**சென்னை, ஏப்.24 :** ஆவடி பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் அலுவலகம் மற்றும் போர் வாகனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 'ஸ்பார்ஷ்' திட்டம் குறித்த விழிப்புணர்வு மற்றும் குறைகேட்பு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

முப்படை ஓய்வூதியதாரார்கள் வங்கிக்கு சென்று தங்களின் ஓய்வூதியம் பெறுவதுக்கு பதிலாக தங்களின் கைப்பேசி மூலம் ஓய்வூதியம் பெறும் வசதி, ஓய்வூதியம் குறித்த விவரம் மற்றும் ஆயுள் சான்றிதழ் அளிக்கும் வகையில் ஸ்பார்ஷ் செயலியை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

இந்நிலையில் ஆவடியில் போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன அரங்கில் முப்படை ஓய்வூதியதாரார்களுக்கான அடையாளம் காணுதல் மற்றும் குறை கேட்பு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் பாதுகாப்பு துறைகூடுதல் தலைமை கணக்காளர் பிரவின்குமார், ஸ்பார்ஷ் திட்டம் குறித்து விளக்கினார். ஓய்வூதியதாரார்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆவடி காவல் துறை ஆணையர் சந்திப் ராய் ரத்தோர் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் 800-க்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் கலந்து கொண்டனர். அதில் சுமார் 300 ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.


பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

வட்டார சாஸ்த்ரா மையம், சென்னை, ஸ்பென்ஸர் பிளாசா - 2வது தளம், 769, அண்ணா சாலை, சென்னை - 600 002. Ph: 044-28502043

**திருத்த அறிவிப்பு**

23.02.2023 அன்று இந்த நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் கடன்தாரர் திரு.தனசேகர் அவர்களின் நிலுவைத் தொகையான 31.01.2023 அன்றுள்ளபடி ரூ.48,06,633.48 என்பதை ரூ.48,09,633.48 என திருத்தி வாசிக்கவும். மற்ற விவரங்கள் மற்றும் ஏனைய நிபந்தனைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

தேதி : 24.04.2023, இடம் : சென்னை

ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!

ஆவின் காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், நெ.X-37

பால்பண்ணை, சிட்கோ தொழில்பேட்டை, காக்களூர் அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம்

**ஒப்பந்தப்புள்ளி**

காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் கீழ் **பால் கொள்முதல், இன்புட் கார்** மற்றும் **பால் விநியோகம் செய்ய 2023 - 2025** இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்த வாகனங்கள் இயக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது. இது தொடர்பான விவரங்கள் மின்னணு வாயிலாக **(online e-tender) www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் ஒப்பந்தப்புள்ளி **24.05.2023**க்குள் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 2279 /ஒப்பந்தப்புள்ளி/2023 **பொது மேலாளர்**

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில்**

மயிலாப்பூர், சென்னை-4

**வேலை வாய்ப்பு அறிவிப்பு** நாள் : 20.04.2023

இத்திருக்கோயிலில் காலியாகவுள்ள ஓதுவார் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு தகுதியுடைய 18 வயது முதல் 45 வயது நிரம்பிய இந்து மதத்தைச் சேர்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பணியிட விவரம்**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | காலி பணியிடம் | சம்பள விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | ஓதுவார் | 1 | 12600-39900 Pay Matrix 13 | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். சமய. அரசு. பிற நிறுவனத்தால் நடத்தப்படும் தேவார பாடசாலையில் மூன்று ஆண்டுகள் பயின்றமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் |

விண்ணப்பப் படிவங்களை **25.04.2023** முதல் **24.05.2023** அன்று மாலை **5.00** மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **24.05.2023** அன்று மாலை **5.45** மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

செ.ம.தொ.இ / 409 / வரைகலை / 2023 **திருக்கோயில் நிர்வாகம்**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**கோரிக்கை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்கூறிய சட்டம்) பிரிவு 13(2) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (மேற்கூறிய விதிகள்) விதி 3(1)-இன் கீழான அறிவிப்பு. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 3-இன் கீழ் உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி **IIFL** ஹோம் ஃபைனான்ஸ் லிட்., (**IIFL HFL**) (முன்பு இந்தியா இன்ஃபோலைன் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., என அறியப்பட்டது) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழான கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரருக்கு / கடன்தாரர்களுக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். இது தொடர்பாக இங்கு மீண்டும் கடன்தாரருக்கு / கடன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை / தொகைகளைக் கோரிக்கை அறிவிப்பு நாளிலிருந்து தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டியுடன் இவ்வறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து **60** நாட்களுக்குள் செலுத்த வேண்டும். கடன்தாரரின் / கடன்தாரர்களின் விவரங்கள், கோரிக்கை அறிவிப்பு நாள்படி நிலுவையிலுள்ள தொகை, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு அளிக்கப்பட்ட ஈட்டுறுதி ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:-

| கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை | கடனீட்டுச் சொத்து விவரம் (அசையாச் சொத்து) |
|---|---|---|
| திரு. ஜெயக்குமார், திருமதி. நந்தியா (வாடிக்கையாளர் எண். **IL10201047**) | **21.04.2023** மற்றும் **ரூ.6,53,364/-** (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து முந்நூற்று அறுபத்து நான்கு மட்டும்) | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. வீட்டு எண் A3, பயன்பாட்டு பரப்பு 278 சதுர அடி மற்றும் மேல்கட்டுமானப் பரப்பு 400 சதுர அடி, சர்வே எண் 71/388, தைலாவரம், கட்டம் 1, TNSCB பிரிவு 6, காஞ்சிபுரம், தமிழ்நாடு, இந்தியா, 603203. |

மேற்குறிப்பிட்ட கடன்தாரர் / கடன்தாரர்கள் மேலே கூறியபடி IIFL HFL நிறுவனத்துக்குத் தொகையைச் செலுத்தத் தவறினால் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-இன்படியும் உரிய விதிகளின்படியும் மேலே விவரிக்கப்பட்ட கடனீட்டுச் சொத்துக்கள் மீது IIFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதன் பொறுப்புகள், செலவினங்கள், விளைவுகள் ஆகியவை முழுக்க முழுக்கக் கடன்தாரரையே / கடன்தாரர்களையே சாரும். மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்க: அதிகாரப்பூர்வ அலுவலர், எண்: **எண் 1, அலுவலக எண் 3E, 3ஆவது தளம், கென்காஸ் டவர், குரோமா ஷோரூம் மேலே, வடக்கு உஸ்மான் சாலை, ராமகிருஷ்ணா தெரு, தி.நகர், சென்னை, தமிழ்நாடு, 600017 / நிறுவன அலுவலகம்: IIFL** டவர், மனை எண் 98, உத்யோக் விகார், கட்டம் - IV, குர்கான், அரியானா.

இடம்: சென்னை, நாள்: **25.04.2023** ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், **IIFL** ஹோம் ஃபைனான்ஸ் லிட். சார்பில்



**நுங்கம்பாக்கம் II கிளை**

எண்.7, சத்யா பிளாசா, திருமூர்த்தி நகர் மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034, Ph: 044-2826 0806

Canara Bank கனரா வங்கி

**அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு** [SECTION 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் **கனரா வங்கியின் அதிகாரம் பெற்ற அதிகாரியாக** நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் கீழ் **Mortgage Loan – 60187830000027: கடன்தாரர்: 1.Mr.K.புருஷோத்தமன், சக-கடன்தாரர்: 2.Mrs.நாகராணி,** எண்.81, அன்னை சத்யா நகர், 2வது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102. **ஜாமீன்தாரர்: 3.Mr.Y.வெங்கட ரமணா,** எண்.200, C-ப்ளாக், டாக்டர் அம்பேத்கர் நகர், சென்னை-600038. **Education Loan - 60189780000045: கடன்தாரர்: Mr.P.பிரவீன்குமார், S/o.K.புருஷோத்தமன், சக கடன்தாரர்: Mr.K.புருஷோத்தமன், ஜாமீன்தாரர்: Mrs.நாகராணி, அனைவரது குடியிருப்பு முகவரி,** எண்.81, அன்னை சத்யா நகர், 2வது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102 ஆகியோர் **30.11.2022** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன்தொகையான ரூ.**38,49,137.33** (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து நூற்று முப்பத்து ஏழு மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் வட்டியை சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8 & 9-ன் படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 20.04.2023 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.**



INDEL money We care for your needs

Corporate office: **Indel Money Limited** IIIrd floor Indel House, Changampuzha Nagar, south Kalamassery, Ernakulum -682033 T: 0484-2933999 E:customercare@indelmoney.com

**அடகு ஏல நோட்டீஸ்**

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 08-05-2023 தேதி காலை 11:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்தி கொள்கிறோம். நகை கடன் பெற்றதும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

சின்மயா நகர -19810610000134 காஞ்சிபுரம்:- 16110610000066, 1061/0086 குளத்தூர்- 19610600000069, 1060/0073, 1060/0084, 19610610000068 மேடவாக்கம்-16410060000053, 16410610000062, 1061/0147 எம்.எம்.டி.ஏ காலனி: -19310610000126, 1061/0127, 1061/0128, 1061/0163, 1061/0165, 1061/0168, 1061/0169, 1061/0170, முகப்பேர:- 16510370000001 பாலவாக்கம்: 20910610000062 பல்லாவரம்: -19910060000195, 1006/0212, 19910470000021, 19910600000025, 19910610000086, 1061/0194, பூனமல்லீ- 16310480000005, 16310600000042, 1060/0051, 16310610000149 தாம்பரம - 19210610000172 வேலூர -16210600000013, 16210610000181, 1061/0202

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net மற்றும் Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in வழியாக 10-05-2023 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 10-05-2023 தேதி அன்று ஈ-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.

இன்டல்மணி லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி



ADITYA BIRLA CAPITAL PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266. கிளை அலுவலகம்: அலகு #10 & 12, 4ஆவது தளம், ஒவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

"பிற்சேர்க்கை - IV-A" [பார்க்க விதி 8(6)]

**அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & விதி 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு. ஈடு பெற்றுக் கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண் 335/2022-இன் கீழான இடைநிலை விண்ணப்ப எண் 9864/2022-இன் பேரில் மாண்பமை பம்பாய் உயர்நீதி மன்றம் வழங்கிய 11.01.2023 நாளிட்ட உத்தரவுப்படி கீழே அட்டவணை 'A'இல் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்ய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் (i) M/s.நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s.நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s.பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி ...



எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 15வது மாடி, பிளஸ் ஸ்ரீஜன் டெக் பார்க், பிளாட் எண் 52, பிளாக் டிஎன், செக்டர் V, சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா - 700 091. மாவட்டம் 24-பர்கனாஸ் வடக்கு.

CIN No.: U65910WB1993FLC060810

கிளை அலுவலகம்: சென்னை

L&T Financial Services

**கையகப்படுத்துதல் அறிவிப்பு**

[விதி-8(1)]

| கடன் கணக்கு எண் | கடன்தாரர்/கள் உப கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதியின் பெயர் | பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம் | டிமாண்ட் அறிவிப்பு: தேதி | டிமாண்ட் அறிவிப்பு: பாக்கியுள்ள தொகை (₹) | கையகப்படுத்திய தேதி மற்றும் வகை |
|---|---|---|---|---|---|
| H00951291220090331, H00951311220105046 மற்றும் H00951291220090331L | 1. ராபர்ட் என் (கடன்தாரர்) நம். 9, 1வது மெயின் ரோடு, 2வது கிராஸ் தெரு, கிருஷ்ணா நகர், மதுரவாயல், சென்னை, தமிழ்நாடு 600095 ... | சொத்தின் அனைத்து முகவரி: சொத்து 470 சதுர அடி UDS உடன் தரை தளத்தில் 1250 பில்ட் அப் ஏரியா, பிளாட் எண் ஜி1, பிளாட்டின் பெயர் "பிரகாஷ் ஹோம்ஸ்", 2400 சதுர அடி நிலப்பரப்பில் ... | 13.02.2023 | ₹76,21,659.44/- ... 06-02-2023 அன்றைய தேதியில். | 19.04.2023 அடையாளமாக கையகப்படுத்துதல் |